7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

26. சென்னை, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான பன்னிரெண்டு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் கல்வி தொடர்புடைய நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற்சொன்ன பல்கலைக் கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 30–9–1991 முதல் சாதாரண வரிவீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 30–9–1991–ஆம் நாளிட்ட 1474–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரி வின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

27. கோட்டுக்குப்பம், ஸ்ரீஅரவிந்த பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான மூன்று மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் கல்வி தொடர்புடைய நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற் சொன்ன நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 23–10–1991 முதல் சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 23–10–1991–ஆம் நாளிட்ட 1582–ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974–ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

24. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம் (தமிழ், ஆங்கிலம்).

25. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

26. நில வரித் துறை, மாவட்ட நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், 1992–93. (தமிழ், ஆங்கிலம்) (கோரிக்கை எண்கள் 1, 11, 41 மற்றும் 46).

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுதல்

27. கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள்— நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93. (தமிழ்—ஆங்கிலம்).

28. கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992— 93 (தமிழ், ஆங்கிலம்).

29. வருவாய்த் துறை பற்றிய சாதனை அறிக்கை, 1992— 93 (தமிழ், ஆங்கிலம்).

30. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது அறிக்கை, 1991–92.

31. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை 1991–92.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS